<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>

<u>அசல் வழக்கு எண்</u>.33/2017

பெயர்-திரு. M.வடிவேல் நாள்.02.09.2025

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : 1 மற்றும்2-ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) எனக்கு திருமணமான தேதி, மாதம் ஞாபகம் இல்லை. வருடம் 2002 ஆகும். திருமணத்திற்கு முன்பு எனது மாமனார், மாமியாரான 1, 2 வாதிகளுடன் உறவு இருந்ததா என்றால், இல்லை. புது உறவு. எனது திருமணத்திற்கு முன்பு 1, 2 வாதிகளின் சொத்துக்களைப் பற்றிய விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. வழக்குச் சொத்தில் க.ச.எண்.127/1 ஏ, 2 ஏ-ல் எனக்கு பு.ஏ.1.30 செண்ட் பூமி பாத்தியப்பட்டது. மேற்படி சொத்து 2-வது அயிட்ட சொத்தாக வழக்குரையில் காட்டப்பட்டுள்ளது என்றால், சரிதான். நான் கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். பு.ஏ.1.30 பூமியை செக்குபந்தி கண்டுதான் வாங்கியுள்ளேன்.

2) வா.சா.ஆ.3 ஆவணத்தில் நான் வாங்கிய பு.ஏ.1.30 பூமிக்கு தென்புறமாக கிழபக்கம் ரோட்டிலிருந்து மேற்கு நோக்கி 12 அடி அகலத்தில் வண்டிப்பாதை உள்ளது என பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். 12 அடி வண்டிப்பாதையில் 1, 2 வாதிகள் பயன்படுத்தும் உரிமையை நிறுத்திக் கொண்டுதான் பத்திரம் எழுதப்பட்டுள்ளது. மேற்படி 12 அடி வண்டிப்பாதை தற்போதும் ஸ்தலத்தில் உள்ளது. மேற்படி 12 அடி வண்டிப்பாதை அமைந்துள்ள இடம் ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் 12 அடி வண்டிப்பாதையும் தாண்டி வடபுறத்தில் உள்ள எனது சொத்தில், எனது அனுபவத்தை இடையூறு செய்வதால் இந்த வழக்கை நான் 1, 2 வாதிகளுடன் சேர்ந்து தாக்கல் செய்துள்ளேன்.

3) பு.ஏ.1.30 பூமியில் 1, 2 பிரதிவாதிகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்களா என்றால், ஆமாம் ஆக்கிரமிப்பு செய்துவிட்டார்கள். எத்தனை அடி அகலம் எனது பூமியில் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றால், சுமார் 2, 3 அடி ஆக்கிரமிப்பு செய்து உழவு செய்து கொண்டிருக்கிறார்கள். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்புதான் ஆக்கிரமிப்பு செய்தார்கள். எந்த தேதியில் ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்று குறிப்பாக சொல்ல

முடியாது. வழக்கு தாக்கல் செய்வதற்கு எத்தனை நாட்களுக்கு முன்பாக ஆக்கிரமிப்பு செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால், சுமார் 1 வாரத்திற்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்தார்கள். ஆக்கிரமிப்பு செய்ததாக பிரதிவாதிகள் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால், கொடுத்தேன். நானும், 1,2 வாதிகளும் சேர்ந்து புகார் கொடுத்தோம். மேற்படி புகார் மனுவின் நகல், ரசீது வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை.

4) வழக்கு 2-ம் அயிட்டச் சொத்தில் 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், அதற்காக புகார் கொடுத்துள்ளதாகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நீதிமன்ற ஆணையர் நிள அளவையருடன் அளந்தபோது வழக்கு 2-ம் அயிட்டச் சொத்தில் நான் இருந்தேன். என்னிடம் காட்டப்படும் அளவையர் வரைபடத்தில் சிவப்பு வண்ணமிட்ட பகுதி எனது அனுபவத்தில் உள்ள சொத்து என்றால், சரிதான். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தபோது, என்னுடைய பூமியான பு.ஏ.1.30 க்கு தென்புறம் உள்ள 12 அடி அகல வண்டிப்பாதையை நான் நீதிமன்ற ஆணையரிடம் காண்பித்தேனா என்றால், காண்பித்தேன். நான் எனது வழக்குரையில் வண்டிப்பாதையை 1, 2 பிரதிவாதிகள் அழித்து ஆக்கிரமிப்பு செய்துவிட்டதாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். தற்போது தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில், வண்டிப்பாதையை 1, 2 பிரதிவாகிதள் ஏற்கனவே அழித்து, ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறியுள்ளேன் என்றால், சரிதான்.

5) நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டபோது வண்டிப்பாதையை காட்டியுள்ளதாக கூறியுள்ள நிலையில், வழக்கிற்கு முன்பாகவே வண்டிப்பாதையை 1, 2 பிரதிவாதிகள் அழித்து ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. வண்டிப்பாதையை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதால்தான், பு.ஏ.1.30 க்கு பதிலாக எனது அனுபவத்தில் பு.ஏ.1.47 இருப்பதாக அளவையர் அறிக்கை கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல. அளவையர் தவறாக அறிக்கை கொடுத்துள்ளார். நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் அளவையர் வரைபடம் ஆகியவற்றிக்கு ஆட்சேபணைகள் தெரிவித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால், எனக்கு தெரியாது. எனது மாமனார் 1-ம் வாதிக்குதான் தெரியும். நான் சொல்வது போல், 1, 2 பிரதிவாதிகள் வண்டிப்பாதையை ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6) வண்டிப்பாதைக்கும் தென்புறம் உள்ள சொத்து, 1,2 பிரதிவாதிகளுக்கு முன்பு முத்தாயாள் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது. முத்தாயாள் காலத்திலிருந்து முத்தாயாள் பூமிக்கும், எனது 2-வது அயிட்ட பூமிக்கும் இடையே ஒரு பழமையான பொலி இருந்தது என்றால், சரிதான். ஆனால், தற்போது இல்லை. எத்தனை முறை நீதிமன்ற ஆணையர் தாவா சொத்திற்கு வந்தார்கள் என்றால், இரண்டு முறை வந்தார். இரண்டு முறையும் நான் இருந்தேன். முதல் தடவை வரும்போது, பூமியின் இயற்கை அமைப்புகளை பார்வையிட்டு சென்றார் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் நீதிமன்ற ஆணையரின் இடைக்கால அறிக்கை மற்றும் வரைபடம் **நீ.ம.சா.ஆ.4** மற்றும் **நீ.ம.சா.ஆ.5** ஆகும். நீதிமன்ற ஆணையர் முதலில் வந்தபோது, அந்த பழமையான பொலி இருந்தது என்றால், சரிதான். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால், சரிதான்.

7) 1, 2 வாதிகள், 1, 2 பிரதிவாதிகளின் பூமிக்கு இடையில் தென்வடல் பொலிக்கால் வரப்பு இருந்ததாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால், சரிதான். மேற்படி **நீ.ம.சா.ஆ.4** மற்றும் **நீ.ம.சா.ஆ.5 க்கு** ஆட்சேபணை தெரிவித்து அறிக்கை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், தெரியாது. முத்தாயாளுக்கு முன்பு பிரதிவாதிகள் பூமி செவலையப்பனுக்கு பாத்தியப்பட்டிருந்தது. எனது மாமனார் வாங்கிய பூமி ராமபண்டாரத்திற்கு பாத்தியப்பட்டது. அவர்கள் இரண்டு பேருக்கும் தலா பு.ஏ.2.4 பாத்தியப்பட்டிருந்தது. செவலையப்பனுக்கு கிழபுறமும், ராமபண்டாரம் பூமி மேபுறமும் இருந்தது என்றால், சரிதான். ராமபண்டாரம் பூமிக்கு சென்றுவர தட பாத்தியம் இல்லாததால், செவலையப்பன் பூமியில் வடபுற ஓரத்தில் 9 லிங்க்ஸ் அகலத்தில் கிழபுற ரோட்டிலிருந்து ராமபண்டாரம் பூமிவரை கிழமேலாக வண்டித்தடம் அமைக்க 5 1/2 செண்ட் பூமியை செவலையப்பன் கொடுத்துள்ளார் என்றும், அந்த 5 1/2 செண்ட்டிற்கு ஈடாக ராமபண்டாரம் அவரது பூமியில் கிழபுற பங்கில் செவலையப்பன் பூமியை ஒட்டியவாறு 3 மடங்காக 16 1/2 செண்ட் பூமி ஈடாக கொடுத்துள்ளார் என்றால், சரியல்ல.

8) 1982-ல் செவலையப்பன் முத்தாயாளுக்கு அவர் அனுபவித்து வந்த 2.15 ஏக்கர் பூமியை கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. அவ்வாறு இல்லை என எனது மாமனார் கூறினார். முத்தாயாளின் கிரைய ஆவணத்தை நான் பார்த்தது இல்லை. முத்தாயாள் அனுபவித்து வந்த 2.15

ஏக்கர் பூமியைத்தான் 1, 2 பிரதிவாதிகள் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார்கள் என்றால், சரியல்ல. ஆதியில் செவலையனுக்கு பு.ஏ.2.4 செண்ட் பாத்தியப்பட்டது என தவறாக கருதி, 1, 2 பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மற்ற வாதிகளுடன் சேர்ந்து தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. எனது வழக்கு பொய்யானது என்பதால், தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.09.02 17:26:25 +0530

District Munsif